# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 21 புதன்கிழமை (03-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:135


# கிளாலிப் பகுதிவரை புலிகள் முன்னேறினர்!

## தகவல் கிடைக்கவில்லை என்கிறது படைத்தரப்பு

கொழும்பு,மே3

**குடாக்கடலை அண்டிய கிளாலிப் பிரதேசத்தில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை மூண்டுள்ளது. கிளாலிப் பகுதிவரை தாங்கள் முன்னேறியிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். பிந்திய கள நிலைவரம் தொடர்பான தகவல்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று கொழும்பில் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

ஆனையிறவுப் பெருந்தளத்தையும், பளை முகாமையும் கைப்பற்றியதைத் தொடர்ந்து கிளாலிப் பகுதி வரை தாங்கள் முன்னேறியிருப்பதாகப் புலிகள் அறிவித்திருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

ஆனையிறவுப் படைத்தளத்தை

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு படையினர் காயம்

கொழும்பு,மே3

வவுனியாவில் பூவரசங்குளத்திலிருந்து இரணை இலுப்பைக் குளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் ஆறு படையினர் காயமடைந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (ஐ-க-3-6)

## வெலிக்கந்த படையினர் மீது ஷெல்வீச்சு

கொழும்பு,மே3

மட்டக்களப்பு - கொழும்புப் பிரதான வீதியில் வெலிக்கந்த நகரில் அமைந்துள்ள இராணுவ, பொலீஸ் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 6-30 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் படையினர் தரப்பில் இருவர் உயிரிழந்தனர் எனவும் - சிவிலியன் ஒருவர் காயமடைந்ததாகவும்- தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-8)

## பலாலி, காங்கேசன்துறை தளங்களுக்கும் அச்சுறுத்தல்!

### மேதின உரையில் ரணில் எச்சரிக்கை

கொழும்பு,மே3

ஆனையிறவு படைமுகாமைத் தொடர்ந்து பளை நகரமும் அரசிடம் இருந்து போய்விட்டது. இப்போது கொடிகாமத்தை நோக்கி யுத்தம் தொடர்கின்றது. யாழ். நகரத்துக்கும் பலாலி, காங்கேசன்துறை தளங்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கூறியுள்ளார் ஐ. தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க. நுவரெலியாவில் நடந்த மே தினக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மே தினம் என்றால் பல வர்ணக்கொடிகளைக் காணலாம். ஆனால் இம்முறை எங்கு பார்த்தாலும் வெள்ளைக் கொடிகளே காணப்படுகின்றன. சோகம் நிறைந்த சூழ்நிலையிலேயே மே தினம் கொண்டாடுகின்றோம். எமது படைகள் யாழ். நகருக்குள் செல்லவும் வெளியே வரவும் இருந்த ஒரே வழி ஆனையிறவு முகாம்தான். இன்று அது இராணுவத்திடம் இல்லை. இந்த இராணுவ முகாமில் ஆயிரக்கணக்கான படையினர் இறந்துள்ளனர். எல்லோரும் குண்டுத் தாக்குதலில் இறக்கவில்லை. ஒரு சில இராணுவத்தினர் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமலும், நோய்வாய்ப்பட்டும் இறந்துள்ளனர்- என்றார். (ஐ-3)

## 42 படையினரின் சடலங்கள் நேற்று மாலை ஒப்படைப்பு!

வவுனியா,மே3

பளைப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சண்டையில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 42 படையினரின் சடலங்கள் படை அதிகாரிகளிடம் கையளிப்பதற்காகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் கிளிநொச்சியில் வைத்து நேற்று ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சடலங்களை எடுத்துச் சென்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் அவற்றை நேற்று மாலை பம்பைமடுவில் வைத்துப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

படையினரின் சடலங்கள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அவை உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் -

எஞ்சியவை வவுனியாவில் வைத்துத் தகனம் செய்யப்படும் என்றும் பாதுகாப்புப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சடலங்களை அடையாளம் காண்பதற்காக பிரிக்கேட் அதிகாரிகள் பம்பைமடுவுக்கு வந்திருப்பதாகவும் -

எனினும் நேற்றிரவுவரை எந்தவொரு சடலமும் அடையாளம் காணப்படவில்லை என்றும் வவுனியா படைவட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-க-3-8)

## போர் நெருக்கடி நிலை தொடர்பான ஜனாதிபதி - ரணில் சந்திப்பில் முக்கிய முடிவு எதுவும் இல்லை

கொழும்பு,மே3

யுத்தம் தீவிரமடைந்திருப்பதை அடுத்து தற்சமயம் நாட்டில் உருவாகியுள்ள நெருக்கடி நிலைமை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்றுமாலை இரு மணிநேரம் இடம்பெற்ற பேச்சுக்கள் பயன் ஏதும் இன்றி முடிவடைந்ததாக செய்தி ஏஜென்ஸிகள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன.

அடுத்தடுத்து பல வெற்றிகளைக் குவித்து குடாநட்டை முழுவதுமாகக் கைப்பற்றும் நிலையில் புலிகள் முன்னேறி வரும் சமயத்தில் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவருக்கும் இடையேயான இந்தச் சந்திப்பில் போர் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் நேற்றைய சந்திப்பு இருவரிடையேயும் இணக்கமான - கூட்டான - தீர்மானம் எதனையும் எடுக்கும் வகையில் அமையவில்லை என்று கூறப்படுகின்றது.

யுத்தத்தில் வெற்றிகளைக் குவித்து வரும் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு வெளிநாடு ஒன்றின் உதவியைக் கோருவது என்று தானோ அல்லது ஜனாதிபதியோ பேச்சின்போது குறிப்பிட

(10ஆம் பக்கம் பார்க்க)

### டிக்கெட் பணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம்,மே3

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்காகப் பயணச் சீட்டுப் பெற்றவர்களில் இதுவரை பணத்தை மீளப்பெறாதவர்கள் அதற்கான கொடுப்பனவை இன்றும், நாளையும் நண்பகல் 12மணிக்குப் பின்னர் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-6)

## யுத்தம் தற்போது மிக பயங்கரமான கட்டத்தில்!

### அரச தரப்பு கூறியதாகத் தகவல்

கொழும்பு,மே.3

யுத்தம் தற்போது மிக மோசமான - பயங்கரமான - நிலையில் இருப்பதாக அரசுத்தரப்பினர் தம்மிடம் தெரிவித்ததாக ஐ.தே.கவின் தவிசாளர் கரு ஜெயசூரிய சொன்னார்.

பி.பி.ஸி சிங்கள சேவைக்கு நேற்றிரவு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் - எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே நேற்று இடம்பெற்ற பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை வெளியிடுவதில்லை என இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளதால் அது தொடர்பான விவரங்களை வெளியிட முடியாதுள்ளது என்றும் அவர் கூறினார்.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஐ.தே.க.தூதுக் குழுவுக்கும்,அரசுத் தூதுக்குழுவுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுக்களில் அடுத்த கட்டப் பேச்சு எதிர்வரும் 5ஆம் திகதி திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

## கொழும்பு விமான நிலைய பாதுகாப்பு ஏற்பாடு உஷார்!

கொழும்பு,மே3

பாதுகாப்பு அச்சுறுத்தல்களைச் சமாளிக்கக்கூடிய வகையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாக விமான நிலையத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான உயர் அதிகாரி தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து பயணிகள் விமானம் ஒன்றைக் கடத்துவதற்குப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியிருப்பது பற்றிக் கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்ததாக ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

விமான நிலையத்தில் மட்டுமன்றி விமான நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக

(10ஆம் பக்கம் பார்க்க)

## குடாக்கடலில் மீன்பிடிக்க நேற்றுமுதல் மீண்டும் தடை!

யாழ்ப்பாணம்,மே.3

குடாக்கடலில் மீன் பிடிப்பதற்கு நேற்றுமுதல் படையினர் மீண்டும் தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகரிலுள்ள கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் நேரில் அழைத்த படையினர் மீனவர்கள் எவரும் நேற்று முதல் குடாக்கடலில் மீன் பிடிக்கச் செல்லக்கூடாது என அறிவுறுத்தியுள்ளதாகக் கடற்றொழிலாளர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மீன்பிடித்தடை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று குருநகர், பாசையூர், கொழும்புத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர் எவரும் தொழிலுக்குச் செல்லவில்லை.

இதனால் குருநகர், பாசையூர், கொழும்புத்துறைப் பகுதிகளைச் சேர்ந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ-9-5-51-15-139)

## குடாநாட்டுப் படையினரைக் காப்பாற்ற இந்தியா, சீனா, பாகிஸ்தானிடம் இருந்து நிபந்தனையற்ற இராணுவ உதவி பெறுக!

### 'சிங்கள உறுமய' கட்சி அவசர கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரையும், பொலீஸாரையும் பாதுகாக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்காக இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நட்பு நாடுகளிடமிருந்து நிபந்தனையற்ற இராணுவ உதவியைக் கோரவேண்டும்.

அண்மையில் உருவாக்கப்பட்ட பேரினவாதக் கட்சியான 'சிங்கள உறுமய' கட்சி மேற்கண்ட அவசர கோரிக்கையை அரசிடம் விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் பிரதான செயலாளர் திலக் கருணாரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1971இல் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையைச் சமாளிக்க வெளிநாடுகளிடம் இராணுவ உதவி பெற்றுக்கொண்டது போன்று தற்போதைய நிலையைச் சுமுக நிலைக்குக் கொண்டுவர இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நட்பு நாடுகளிடமிருந்து நிபந்தனையற்ற ராணுவ உதவியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்.

இவ்வாறு செயற்பட முடியாவிட்டால் அல்லது செயற்படத் தாமதித்தால் அரசாங்கத்துக்கு ஆட்சி செய்வதற்கென்று நாடு ஒன்று கிடைக்காமலே போகும் - என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ-3-7-8)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### பொதுச் சுகாதார மருத்துவ மாது (அமைய) பதவி

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் பின்வரும் தகைமை யுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 16-05-2000ஆம் திகதிக்கு முன்னர் 'மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

*தகைமைகள்:-*

1) 16-05-2000 ஆம் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
2) க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டும்.
3) மருத்துவ மாதர்களுக்கான பயிற்சி பெற்றிருக்கவேண்டும் அல்லது பதிவு செய்யப்பட்ட குடும்பநலசேவையாளராக இருத்தல்வேண்டும்.
4) பிரசவ விடுதிகளில் மருத்துவமாதர்களாகப் பணியாற்றியவர்களுக்கும், மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
5) ஏற்கனவே அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களின் விண்ணப்பங்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப் பரிசீலனை செய்யப்படும்.
6) மேலதிக விவரங்கள் அலுவலக நேரங்களில் மாநகரசபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

*யாழ்ப்பாணம்.*
*02-05-2000*

**- மாநகர ஆணையாளர்**

(C/12027)

## பிற்போடப்பட்டுள்ளது

புவியியற்கழகத்தினால் 03-05-2000 அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு சில தவிர்க்கமுடியாத காரணங்களினால் எதிர்வரும் 03-06-2000 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

*புவியியற்கழகம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*
*02-05-2000*

**- தலைவர்**

(75956)


## றேடியன்ற் கல்வி நிறுவனம்

கச்சேரி கிழக்கு வீதி, சுண்டுக்குளி.

**A/L 2002**

ஆரம்பம்: 07-05-2000 ஞாயிறு 8.00 a.m.

| | |
|---|---|
| தமிழ் | - A. மீரா |
| அளவையியல் | - K.T.மோகன் |
| இந்துநாகரீகம் | - P. ஜோதீஸ்வரன் |
| | M. செல்வா |
| கிறிஸ்தவம் | - A. மல்லிகா |
| நாடகமும் அரங்கியலும் | - S. சுந்தா |
| பொதுவிளா | - T. தவசேகர் |
| புவியியல் | - M. இக்னேசியஸ் |
| பிரத்தியேக கணக்கீடு | - S. கொலின்ஸ் |

(75926)

**SHAMROCK**

**A/L DAY CLASS**

கிரயக் கணக்கீடு

ஆரம்பம்:

இன்று 03-05-2000

9.00 a.m.

**Mr. RAJANI**

* G.A.Q 2000 PAPER

POLI. SC. - Mr. சாம்சன்

Hindu. - Mr. நித்தி

* O/L DAY CLASS

* Gr. 5 முதல் O/L வரை

(C/12022)

## ராஜா

யாழ்ப்பாணம்.

4ஆவது வெற்றி வாரமாக

அஜித், ஷாலினி

நடிப்பில்

**அமர்க்களம்**

காட்சிகள் 10.30, 2.30,

(C/11804)

## நாகம்ஸ்

சுன்னாகம்.

விஜய், ஷாலினி, ரகுவரன்

நடித்த

**கண்ணுக்குள் நிலவு**

(ரீலீஸ்)

காட்சிகள் 11.00, 2.30

(புதிய நேரம்)

(75883)

## லிபேட்டி

அச்சுவேலி.

இன்று மட்டும்

கார்த்திக், ரோஜா, கௌசல்யா

நடிப்பில்

**சந்தித்த வேளை**

(புதிய வெளியீடு)

காட்சிகள் 10.30, 2.30

T.P-070-212223

-070-212678

FAX No. 0094 - 70212223

(75816)


### நாவற்குழிப் பகுதியில் இருந்த

# ஜேர்மன் தொண்டு நிறுவன களஞ்சியம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,மே3

குடாநட்டில் தோன்றியுள்ள யுத்த சூழ்நிலையை அடுத்து ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நாவற்குழிப் பகுதியில் நிறுவப்பட்டிருந்த பாரிய களஞ்சியம் ஒன்று மூடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் அங்கு களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன.

தற்போது நாவற்குழிப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தொடர்ந்து களஞ்சியத்தில் இருந்த பொருள்களை அப்புறப்படுத்தும் பணிகள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பொருள்கள் யாவும் இணுவில் பகுதியில் உள்ள ஓர் இடத்தில் தற்போது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-9-10)

### இடம்பெயர்ந்தோருக்கு

# தற்காலிக பங்கீட்டு அட்டை நேற்று முதல் விநியோகம்

பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள மக்களுக்கு தற்காலிக பங்கீட்டு அட்டை வழங்கும் பணிகள் அவர்கள் தங்கியுள்ள பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகங்களில் நேற்று தற்காலிக பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தென்மராட்சிப் பிரதேசத்தின் தூர இடங்களிலுள்ள இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் பங்கீட்டு அட்டைகளை விநியோகம் செய்ய பிரதேச செயலரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ஜ-117)

## தவறவிட்ட சூட்கேஸ்

கொடிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்றவர்களால் தவறவிடப்பட்டதாகக் கூறப்படும் சிறிய சூட்கேஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. கந்தையா சிவஞானம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட அந்த சூட்கேஸ் சுன்னாகம் பஸ் நிலையம் முன்பாகவுள்ள 'துர்க்கா ஸ்ரேசனேர்ஸ்' பத்திரிகை விற்பனை முகவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்-

தவறவிட்டோர் அங்கு அதனைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## உதைபந்தாட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக் 22 வயதுக்குட்பட்டவர்களுக்கு விலகல் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் - நாளை இடம்பெறும் ஆட்டங்களில பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப.4மணி - கலைவாணி வி.க. எதிர் கிறீன்கிங்ஸ் வி.க.

* மாலை 5மணி சென். அன்ரனீஸ் வி.க. எதிர் சென். மைக்கல் வி.க. (ஜ-8)

## இளைஞர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மே.3

சங்கானையில் வைத்து கடந்த 28ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தையா நவரத்தினம் (சங்கரத்தை, வட்டுக்கோட்டை), குருமூர்த்தி சொரூபன் (சங்கானை) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர். (ஜ-5)

## கட்டடப் பொருள்கள் விநியோகம்

கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையில் சிமெந்து, 'சீற்' உட்பட கட்டடப் பொருள்கள் தாராளமாக இருப்பதாகக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டுத்தாபனத்துக்குரிய ஓடுகள் மற்றும் கட்டடப் பொருள்களுடன் கொழும்பிலிருந்து கப்பலொன்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-5)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

விண்ணிலிருந்து நயினை மண்ணில்
01
-
11
-
1967



பாரீஸிலிருந்து பரந்த விண்ணில்
06
-
05
-
1997

அமரர்

**காராளபிள்ளை விநாயகசிவம்**

**(கண்ணன்)**

*5ஆம் வட்டாரம், நயினாதீவு.*

கண்ணா உன்னை நினைக்கையிலே
உள்ளம் துடிக்குதடா
எம்மைவிட்டு உன்னை - இறைவன் பறித்தானோ,
சின்னக்குழந்தை போல்
சிரிப்பு மறையாதா கண்ணா
உனை இனிமேல்
காண்போமா பூ உலகில்
எண்ணங்கள் தடுமாற
எழுதுகோல் எமை நனைக்க
உன் மறைவை எண்ணி
உன் சுற்றம் கலங்கி நிற்க
எங்கே போனாய்?
ஏன் இந்த அவசரம்
கண்ணா நீ மூன்றாண்டு சென்றாலும்
மீண்டும் எம் இடத்தில் வந்து விடு.

- துயருறும் குடும்பத்தினர்.

தகவல்:-
*கா. சுதா,*
*விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்,*
*நயினாதீவு.*

(75822)

### மீனவர்கள் கொலைச் சம்பவம்

# தமிழகத்தில் கொந்தளிப்பு! தலைவர்கள் கண்டனம்!!

சென்னை, மே 3

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது தமிழ் நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோபாலசாமி விடுத்த அறிக்கையில், மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் இலங்கை அரசின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும்- இலங்கை அரசிடம் இருந்து பாதிப்படைந்தவர்களுக்கு மத்திய அரசு நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் ''இலங்கைக் கடற்படை, நமது கடல் பகுதிக்குள் நுழையும்போது இந்தியக் கடற்படை என்ன செய்து கொண்டிருந்தது? இவர்களின் இத்தகைய அலட்சியப் போக்கினால்தான் எமது மீனவர்கள் அநியாயமாகப் பலியாகியுள்ளனர்'' என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதற்கிடையில் இலங்கைக் கடற்படையின் கொடூரச் செயலைக் கண்டித்து தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாது போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

தமிழக மீனவர்களின் உயிருக்கு இந்தியக் கடலிலே உத்தரவாதம் இல்லாத நிலை உள்ளதாகவும் இதற்குத் தீர்வு வரும்வரை மீன்பிடிக்கச் செல்லப்போவதில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தியக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 3 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டதும், மேலும் ஒரு மீனவர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே. (இ-ஒ)

## இதயநோயைத் தடுக்கும் சக்தி பியருக்கு அதிகம் உண்டாம்

### உணவு ஆராய்ச்சியாளர் கூறுகிறார்

லண்டன், மே 3

இதய நோய்கள் வராமல் பாதுகாக்கும் சக்தி பியருக்கு அதிகம் உண்டு என லண்டனைச் சேர்ந்த டி. என். ஒ. உணவுக்கட்டுப்பாட்டு மற்றும் ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சியாளர் டாக்டர் கென்க் கென்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

பியரில் உள்ள 'விட்டமின் பி 6' இதய நோய்க்குக் காரணமாக உள்ள 'ஹோமோசைஸ்டெய்ன்' என்ற இரசாயனம் உடலில் சேர்வதைத் தடுக்கிறது. இதனால் இதயநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் பெருமளவு குறைகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

நல்ல தேகாரோக்கியமுள்ளவர்களுக்குப் பியர், தண்ணீர் மற்றும் மதுபானம் ஆகியவற்றைத் தொடர்ந்து 3 வார காலம் பருகக் கொடுத்த பின் மேற்கொண்ட சோதனைகளில் இந்த முடிவு தெரிய வந்துள்ளது.

இவை அனைத்தையும் கூறிய டாக்டர். கென்டிரிக்ஸ் ''பியர் உட்பட எந்த மதுபானத்தையும் அருந்தாமல் இருந்தால் இதய நோய்களின் பாதிப்பு முற்றாகத் தடுக்கப்படலாம்'' என்றும் கூறினார்.

(இ-ஒ)

## பாக். உட்பட மூன்று நாடுகள் இடைநிறுத்தம்

அம்மான், மே 3

பாகிஸ்தான், சூடான் மற்றும் ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகளை உறுப்பினர் அந்தஸ்த்தில் இருந்து இடைநிறுத்தம் செய்வதற்கு சர்வதேச நாடாளுமன்றச் சங்கம் முடிவு செய்துள்ளது. என்றும் இந்த நாடுகளில் மீண்டும் ஜனநாயக ஆட்சிமுறை ஏற்படும் வரை இடைநிறுத்தம் அமுலில் இருக்கும் என்றும் நாடாளுமன்றச் சங்கத் தலைவர் அன்ரனி ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

(இ-ஒ-9)

## ஈரானில் குண்டுத் தாக்குதல் 6 பேர் படுகாயமடைந்தனர்

தெஹ்ரான், மே 3

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற மோட்டார் குண்டுத்தாக்குதலில் 6 பேர் படுகாயமடைந்தனர்.

பொலிஸ் தலைமையகக் கட்டத்தை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஈரான் அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்திய தொழிற்சட்டங்கள் தொடர்பாக தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

அதேசமயம் பழைமைவாதிகளை எதிர்த்து மாணவர்களும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் இடம் பெற்றுள்ள மேற்படி மோட்டார்த் தாக்குதலை நடத்தியவர்கள் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

(இ-ஒ-9)

### உதயன் அரங்கில்

## கொங்கோவில் ஐ. நா. படையை விரிவுபடுத்துமாறு கோரிக்கை

அல்ஜியேர்ஸ், மே 3

கொங்கோ நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொருட்டு ஐ.நா. படையணியை விரைவில் விரிவுபடுத்துமாறு அல்ஜீரிய ஜனாதிபதி அப்துல் அஜீஸ் கோரியுள்ளார்.

ஆபிரிக்கத் தலைவர்களின் ஒருநாள் மாநாட்டையடுத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆபிரிக்காவின் சக்தி மிக்க நாடுகளான நைஜீரியாமற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் சமாதானப்படையணிக்கு வீரர்களை அனுப்பத்தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆபிரிக்க நாடான கொங்கோ உள்நாட்டு யுத்தத்தால் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. சமாதான நடவடிக்கையாக லுஸாக்கா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டும் எந்தவித பலனும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-ஒ-9)

## நோபல் பரிசுத் தொகை அதிகரிப்பு

ஜெனிவா, மே 3

இந்த வருடத்துக்கான நோபல் பரிசுத்தொகை 4.4 கோடி ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தகவலை நோபல் பரிசுக்குழு தெரிவித்துள்ளது.

இந்தப் பரிசைத் தோற்றுவித்த அல்பிரட் நோபல் 44. 4 கோடி டொலர்களை பல்வேறு நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்திருந்தார்.

இந்த முதலீடுகளின் வருமானம் தற்போது உயர்ந்துள்ளதால் மேற்படி பரிசுத் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-ஒ)

## பச்சைக் காய்கறி உண்பதால் ஆரோக்கியம்

பெங்களூர், மே 3

ஒரு நாளில் பெருமளவு நேரத்தை சமையலில் செலவழிப்பவர்கள் மத்தியில், கர்நாடகத்தில் ஒரு குடும்பம் பச்சைக் காய் கறிகளையே உணவாகச் சாப்பிட்டு வருகிறது.

இந்தக் குடும்பத்தின் தலைவரான ஆஜித் கவுடா என்பவருக்கு தற்போது 84 வயதாகிறது. கடந்த 40 வருடமாக இவர் சமைத்த உணவைச் சாப்பிடவே இல்லையாம். எப்போதும் பச்சைக் காய்கறிகளையே உண்டு வருகிறாராம்.

தான் மட்டுமல்லாமல் குடும்பத்தையும் தன் வழிக்கு இவர் இழுத்து விட்டுள்ளார்.

''இந்த வயதிலும் நான் மிக ஆரோக்கியமாக இருப்பதற்குக் காரணம் சமைக்காத மரக்கறிகளே'' என்று கூறுகிறார் கவுடா.

இத்தோடு நிறுத்தாமல் சமைக்காத உணவின் புகழை அக்கம் பக்கத்திலும் பரப்பி வருகிறாராம் கவுடா.

(இ-ஒ-9)

## பொதுநலவாய அமைப்பின் குழு சிம்பாப்வே குறித்து விசாரணை

லண்டன், மே 3

பொதுநலவாய நாடுகளின் நடவடிக்கைக்குழு சிம்பாப்வே பிரச்சினை குறித்து விசாரணை நடத்த லண்டனில் கூடியது.

சிம்பாப்வேயில் வெள்ளை இனவிவசாயிகள் மீதான தாக்குதலை நிறுத்தவும் நிலையான அரசு அமைய நடவடிக்கை எடுக்கவும் அதிபர் முகாபேயை இந்தக் குழு நிர்ப்பந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒழுங்கு நடவடிக்கைக் குழுவில் பிரிட்டன், கனடா, பொஸ்வானா உட்பட 8 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்தக்குழு பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் நிலையான ஆட்சியை உறுதி செய்தல் போன்றவற்றில் அக்கறை செலுத்தி வருகிறது.

சிம்பாப்வே பிரச்சினையில் மேற்படி குழு தற்போது தான் தலையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-ஒ-9)

## அணு ஆயுத வல்லரசு நாடுகள் கூட்டறிக்கை

நியூயோர்க், மே 3

அணு ஆயுத வல்லரசுகள் முழுமையான ஆயுதக்களைவு நடத்தத் தமக்குள்ள தெளிவான கடமைப்பாட்டை விளக்கிக் கூட்டறிக்கை விடுத்துள்ளன.

அந்தக் கூட்டறிக்கையில் 1996 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சர்வ அம்ச அணுவாயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் சகல நாடுகளும் சேரவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ-ஒ-9)

## மீண்டும் தி.மு.க. ஆட்சி: வை.கோ.

சென்னை, மே 3

''தமிழகத்தில் எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தலை அடுத்துக் கூட்டணி ஆட்சி ஏற்பட வாய்ப்பில்லை'' மேற்கண்டவாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கூறியுள்ளார்.

மேலும் எதிர்வரும் சட்டமன்றத்தேர்தலின் பின் மீண்டும் தி.மு.க வே ஆட்சிக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-ஒ-9)

## நாடாளுமன்றத்தில் அமைதி காக்க குரானா தீர்மானம்

புதுடில்லி, மே 3

விலைவாசி உட்பட பாரதீய ஜனதா அரசுக்கு சங்கடம் ஏற்படுத்தும் பிரச்சினைகள் பற்றி நாடாளுமன்றத்தில் பேசப்போவதில்லை என மதன்லால் குரானா கூறியுள்ளார்.

சென்றவாரம் பா.ஜ.கவின் துணைத்தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட குரானா பிரதமர் வாஜ்பாயை சந்தித்துப் பேசினார்.

அதன் பின்பே மேற்கண்ட முடிவை எடுத்ததாகக் கூறப்படுகிறது.

(இ-ஒ)

## பலஸ்தீனம் விட்டுக் கொடாது

ஜெருசலேம், மே 3

சுயாதீனமான பலஸ்தீன நாடு என்ற தமது கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாது என்று பலஸ்தீனப் பேச்சாளர் தெரிவித்தார்.

பலஸ்தீனப் பிராந்திய எல்லைகளை நிர்ணயிப்பது குறித்தே தற்போது தீர்மானிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

(இ-ஒ)

## கேரளாவில் இருவர் உயிருடன் எரித்துக் கொலை

திருவனந்தபுரம், மே 3

கேரளா மாநிலம் ஆலப்புழையில் இரண்டு பேர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர்.

அடுக்குமாடிக் குடியிருப்பின் இரண்டாம் தளத்தில் தொலைக்காட்சிச் சேவை நடத்தி வந்தவர்களே கொல்லப்பட்டவர்களாவர்.

ஜீப்பில் வந்த ஒரு கும்பல் இவர்களின் அலுவலகத்தினுள் நுழைந்து பெற்றோல் ஊற்றி இருவரையும் எரித்துக் கொன்றது. பின்பு அந்தக் கும்பல் தப்பி ஓடிவிட்டது. கேரளாப் பொலிஸார் கொலைக் கும்பலைத் தேடி வருகின்றனர். (இ-ஒ-9)

## ராமதாஸ் கருத்து

சென்னை, மே 3

''ராஜீவ் கொலை வழக்கில் நளினிக்கு தண்டனையைக் குறைத்தது போல் மற்றைய மூவருக்கும் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்'' என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

மேற்படி விடயம் குறித்து செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு கூறினார்.

(இ-ஒ-9)

### இலங்கையில்

# வேற்று நாட்டு இராணுவத் தலையீடு வேண்டாத விளைவுகளையே தரும்

### பழ. நெடுமாறன் தெரிவிப்பு

சென்னை, மே 3

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா உட்பட எந்த நாட்டு இராணுவம் தலையிட்டாலும் அது வேண்டாத விளைவுகளையே ஏற்படுத்தும்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றையும் சென்னையில் வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து வேட்டையாடுகின்றது. அண்மையிலும் மூன்று மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் இதுவரை இலங்கை அரசு இத்தகைய சம்பவங்கள் எதற்கும் கவலை தெரிவிக்கவில்லை. ஆனால் புலிகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த இந்தியப் படைகள் வர வேண்டும் என்று சிங்கள இனவாதக் குழுக்கள் இந்திய அரசிடம் கோரி உள்ளன.

இதே இனவாதக் குழுக்களே இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த சமயம் அதனைக் கடுமையாக எதிர்த்தவர்கள் என்பதை மறந்துவிட முடியாது.

தற்போது எப்படியாவது புலிகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக இந்தியப் படையினரையோ அல்லது 'சார்க்' படையினரையோ இலங்கைக்கு அழைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6-9)

# பொருள்களை பதுக்கி வைத்து கள்ளச் சந்தையை உருவாக்காதீர்!

## வர்த்தகர்களுக்கு சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 3

யுத்தத்தைத் தமக்குச் சாதகமாக்கி திட்டமிடப்பட்ட பதுக்கலில் ஈடுபட்டு கறுப்புச் சந்தையை உருவாக்க வேண்டாம் என்று யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் சகல வர்த்தகர்களையும் கோரியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று எமது பிரதேசத்தில் தற்காலச் சூழலில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாகவும், தொழில் வசதிகள் குறைவு காரணமாகவும் எம் மக்கள் சொல்லொணா துயரடைகின்றனர்.

சில நாள்களுக்கு முன்னர் வர்த்தகர் சமூகத்தைப் போற்றிப் புகழ்ந்தவர்கள், தற்போது தூற்றித் திட்டுகின்றனர்.

வர்த்தகர்களில் ஒரு சிலர் யுத்தத்தைத் தமக்குச் சாதகமாக்கித் திட்டமிட்ட பதுக்கல்களில் ஈடுபட்டுக் கறுப்புச் சந்தையை உருவாக்கிக் கொள்ளையடிக்கும் கொடுமையில் ஈடுபட்டுள்ளனர் என நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது ஆறு மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் யாழ். மாவட்டத்தில் இருப்பில் இருப்பதால் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்காது, தட்டுப்பாட்டை ஏற்படுத்தாது விலைகளைக் கூட்டி ஏழை மக்களுக்குத் துன்பத்தின்மேல் துன்பம் ஏற்படுத்தாது சகல வர்த்தகர்களும் நடந்துகொள்ளவேண்டுமென யாழ்.மாவட்டத்திலுள்ள பதினைந்து வர்த்தகர் சங்கங்களும் அங்கம் வகிக்கும் யாழ் மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் கேட்டுக்கொள்ளுகின்றது. என்றுள்ளது. (இ-3)

## அச்சுவேலியில் உற்பத்தியாகும் கோழிக் குஞ்சுகளைப் பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

திருநெல்வேலி, மே 3

யாழ். நாவலர் வீதியில் செயற்பட்டுவரும் அரசாங்க கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒரு நாள் கோழிக் குஞ்சுகளைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அச்சுவேலியிலுள்ள கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் இந்தக் கோழிக் குஞ்சுகளைப் பெறுவதற்கு தற்போது இருநூறுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

இவர்கள் பதிவு செய்த திகதி ஒழுங்கின் பிரகாரம் இவர்களுக்கு கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும் என்றும் —

ஒரு மாதத்தில் 30பேருக்கே குஞ்சுகளை விநியோகிக்க முடியும் என்றும் — அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை — ஒவ்வொரு மாத இறுதியிலும் கோழிக் குஞ்சு பெறவிருப்பவர்களின் பெயர்ப்பட்டியல் இந்த அலுவலகத்தின் விளம்பரப்பலகையில் பொறிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-135)

## சுகாதாரப் பரிசோதகர் நியமனம்

அராலிப் பகுதிக்கான பொது சுகாதாரப் பரிசோதகராக ச. அருள்மாறன் கடந்த மாதம் தொடக்கம் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக இந்தப் பதவி நிரப்பப்படாது வெற்றிடமாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை — நல்லூர் பொது சுகாதார பரிசோதகராக கு. கருணாநிதியும், ஊர்காவற்றுறை பொது சுகாதார பரிசோதகராக ஆர். இந்திரஜித்தும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பொது சுகாதார பரிசோதகர் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்ததை அடுத்து இவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (இ-6-135)

## சொத்து இழப்புக்களுக்காக அரச ஊழியருக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை இல்லை

வலி.தென்மேற்கு, மே 3

வடபகுதி அரசாங்க ஊழியர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாக நஷ்டஈடு வழங்குவதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் இருந்து 500க்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்த வீடு மற்றும் சொத்து இழப்புக்களுக்கு நஷ்டஈடு கோரி அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளனர். ஒருவருடமாகியும் அமைச்சில் இருந்து நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

மேற்படி நஷ்டஈடு தொடர்பாக விண்ணப்பித்த அனைவருக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுச்செயலாளர்களிடமிருந்து விண்ணப்பம் கிடைத்ததுக்கான கடிதம் மட்டுமே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-6-185)

## அரச ஊழியருக்கான இடைக்காலக் கொடுப்பனவு தாமதம் அடையலாம்

கொழும்பு, மே 3

வடக்கு — கிழக்கில் தற்போது யுத்தம் தீவிரமடைந்துள்ளதால் அரச ஊழியர்களுக்கு இடைக்காலக்கொடுப்பனவு வழங்குவது தாமதமாகலாம் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார். சம்பளம் அதிகரிக்கப்படும்வரை இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்படாதிருப்பது தெரிந்ததே.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பாக ஆராய ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அரசு முன்னர் தீர்மானித்தது.

எனினும் ஆணைக்குழு ஒன்றை அமைத்து அதன் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த நீண்ட காலமாகும் என்பதால் அரச ஊழியர்களுக்கு இடைக்காலக்கொடுப்பனவு ஒன்றை வழங்க இணக்கம் காணப்பட்டிருந்தது. (இ-8)

## அலுவலகப் பணிகள் ஸ்தம்பிதம்

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் போதிய எழுதுவினைஞர்கள் இன்மையால் அலுவலகப் பணிகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வருவதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

திணைக்களத்தில் 11 எழுதுவினைஞர்கள் கடமையாற்ற வேண்டிய தேவை இருக்கும் போது தற்பொது ஒரே ஒரு எழுதுவினைஞர் மட்டுமே பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

திணைக்களத்தில் நிலவும் எழுதுவினைஞர் வெற்றிடங்களை நிரப்புமாறு வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் — அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-6-17)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 3

மாதகல் அரசடி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 4 30 மணி தொடக்கம் 5.30 மணிவரை 'வில்லி பாரதம்' பற்றி கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா தொடர் சொற்பொழிவாற்றுவார். (க-10)

★ ★ ★

வடமராட்சி, மே 3

அல்வாய் கிழக்கு பெருங்கலட்டி தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய மணவாளக்கோலம் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகம் திருவூஞ்சல் ஆகியவற்றுடன் நடைபெறும். (க-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 3

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் (க-17)

★ ★ ★

தென்மராட்சி, மே 3

மட்டுவில் தெற்கு வேரற்கேணி கந்தசாமி கோயில் மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-117)


உ

தென்மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோயில்

மகோற்சவப் பெருவிழா

2000.05.04 வியாழன் பகல் 10.30 மணிக்கு
கொடியேற்றத் திருவிழா

2000.05.11 வியாழன் மாலை 3.00 மணிக்கு
வேட்டைத் திருவிழா

2000.05.16 செவ்வாய் மாலை 5.00 மணிக்கு
சப்பறத் திருவிழா

2000.05.17 புதன் பகல் 10.00 மணிக்கு
தேர்த் திருவிழா

2000.05.18 வியாழன் பகல் 10.00 மணிக்கு
தீர்த்தத் திருவிழா

2000.05.19 வெள்ளி மாலை 3.00 மணிக்கு
பூங்காவனம்- திருக்கல்யாணம்

2000.05.20 சனி பகல் 10.00 மணிக்கு
பிராயச்சித்த அபிஷேகம்

மாலை 5.00 மணிக்கு வைரவர் மடை

திருக் கோயில் பிரதமகுரு
சிவாகம கிரியா கலாநிதி
சிவப்பிரமஸ்ரீ சு. சோமாஸ்கந்தக் குருக்கள்
(சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரசக்தி விநாயகர் ஆலய பிரதமகுரு)

அனைவரும் வருக!
கந்தன் அருள் பெறுக!

ஆலய
தர்ம பரிபாலன சபை.

(75949)



## புகைப்படம் எடுத்தல்

யாழ்.பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுக்கான குழு புகைப்படப்பிடிப்பு 05 - 05 - 2000 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கிற்கு அருகில் இடம்பெறும்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்,
கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்.

(75950)



## மரண அறிவித்தல்

### திருமதி கந்தர் நாகம்மா

புத்தூர் வடக்கு, நரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரான, காலஞ்சென்ற கணபதி கந்தர் அவர்களின் அன்பு மனைவி நாகம்மா அவர்கள் 30—04—2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி பொ. பூரணம், ப. தங்கம்மா, வே. இராசமணி, கலாநிதி க. தியாகராசா (பிரதம கணக்காய்வாளர், வ.கி.மா. திருகோணமலை) காலஞ்சென்ற திரு.க. தர்மலிங்கம், காலஞ்சென்ற திருமதி ந. ஈஸ்வரி, ந. கண்மணி, திரு. க. சுப்பிரமணியம், திருமதி க. சகுந்தலாதேவி, திரு. க. ஜெயபராபரன் ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-04-2000 அன்று பூவோடை இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

புத்தூர் வடக்கு.
நராந்தனை.

(75943)

## தொலைத்தவர்களுக்கு
# விசேட அ. அட்டை மீண்டும் வழங்க
# அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்
### நிர்வாக உத்தியோகத்தர் கடிதம்

வலி.வடக்கு, மே 3

யாழ். மாவட்டத்தில் விசேட அடையாள அட்டைகள் தொலைத்தவர்களுக்கு அவற்றை மீள வழங்குவதற்கு வேண்டிய அழுத்தத்தைக் கிராம அலுவலர்களும் பிரதேச செயலர்களும் பிரஜைகள் குழுக்களும் சிவில் நிர்வாக இராணுவ இணைப்பதிகாரிக்குக் கொடுப்பதன் மூலமே விசேட அடையாள அட்டைகளை மீளப்பெற முடியும்.

விசேட அடையாள அட்டைப் பிரிவின் நிர்வாக உத்தியோகத்தரினால் நல்லூர்ப் பிரதேச செயலக இடம்பெயர் சேவைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெற்று வரும் இடம் பெயர் சேவையில் விசேட அடையாள அட்டைப் பிரிவினரையும் கலந்து கொள்ளும்படி கோரிப் பிரதேச செயலகத்தால் கடிதம் அனுப்பப்பட்டமைக்கே பிரதேச செயலாளருக்கும் இந்தப் பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் கிராம அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

தொலைந்த விசேட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய விசேட அடையாள அட்டைகளை வழங்க வேண்டாம் என பிரதான சிவில் நிர்வாக இணைப்பதிகாரி 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி உத்தரவிட்டதாகவும் —

இதற்கான காரணம் என்ன என்பதை அவரே அறிவார் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் பொது மக்களும் கிராம அலுவர்களும் இராணுவ உத்தியோகத்தர்களுமே எனவும் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விசேட அடையாள அட்டைப் பிரிவுக்கு விண்ணப்பங்கள் கிடைத்த பத்து நாள்களுக்குள் புதிய மற்றும் மாற்றங்களுக்கு உள்ளாகும் அடையாள அட்டைகள் மீள வழங்கப்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (இ-86)

# தேர்தல்களை சனிக்கிழமைகளில் நடத்த அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, மே 3

எதிர்காலத்தில் தேர்தல்களை வார இறுதி நாளான சனிக்கிழமையே நடத்த வேண்டும் என்று ஐ.தே.க. தவிசாளர் கருஜெயசூரியா கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சனிக்கிழமையில் தேர்தல் நடத்துவதால் மறுநாள் விடுமுறையாக இருப்பதால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் வார நாள்களில் தேர்தல் நடத்துவதால் அரசுக்கு 300 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது என்றும் —

தேர்தலைச் சனிக்கிழமையில் நடத்துவதால் இந்த நிலை தவிர்க்கப்படும் என்றும் — அவர் மேலும் சொன்னார் (இ-3)

# மலேரியா நோயை ஒழிப்பதற்கு நடமாடும் சிகிச்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 3

மார்ச் தொடக்கம் ஏப்ரல் வரை சுமார் 35 நடமாடும் மலேரியா சிகிச்சை நிலையங்கள் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்டுள்ளன என்று மாவட்ட மலேரியாத் தடுப்பு அதிகாரி கே. சி. சிவபாதம் தெரிவித்தார்.

மேற்படி நடமாடும் நிலையங்கள் யாவும் மலேரியாவால் அதிகம் பாதிக்கப்பட்டோர் உள்ள மற்றும் வைத்தியசாலை வசதிகள் இல்லாத இடங்களிலேயே நடத்தப்பட்டன என்றும் —

சுகாதார வெளிக்கள உதவியாளர், நுணுக்குக்காட்டியாளர், உதவியாளர் கொண்ட குழுவொன்றே குறிப்பிட்ட நிலையங்களுக்குச் சென்று மலேரியா சிகிச்சையில் ஈடுபட்டு வருவதாகவும்—

இதனால் கடந்த காலங்களை விட இந்த ஆண்டு மலேரியாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் — அவர் தெரிவித்தார்.

(இ-10)

## பரீட்சை

யாழ். பல்கலைக்கழக பொது நிர்வாக பட்டப்பின் மாணவர்களுக்கான அரை ஆண்டு பரீட்சை மே மாத நடுப்பகுதியில் நடைபெறும்.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். பல்கலைகழக உயர் பட்டக் கற்கை நெறி பீடாதிபதி அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

(இ-185)

# குழந்தைகளுடைய எதிர்காலம் பெற்றோரிடமே தங்கி உள்ளது
### சிறுவர் பாதுகாப்புநிதிய அலுவலர் உரை

குருநகர், மே 3

''குழந்தைகளின் ஆற்றல் மிக்க எதிர்காலம் அவர்களது பெற்றோர்களிடமே தங்கி உள்ளது. அவர்களது உடல், உள வளர்ச்சிக்கு உதவ வேண்டியது பெற்றோர்களின் கடமை ஆகும். குழந்தைகள் சந்தோஷமான சூழ்நிலையில் வளரும் போது — வளர்க்கப்படும் போது — சிறந்த தேகாரோக்கியத்தைப் பெறுகின்றார்கள்''.

சிறுவர் பாதுகாப்பு நிதிய சிறுவர் உரிமைத்திட்ட அலுவலர் திருமதி ஒலிவற் ஜெனோவா அல்பிரெட் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பெற்றோர்களுக்கான கருத்தரங்கில் ''குடும்பமும் சிறுவரின் ஆரம்ப அபிவிருத்தியும்'' என்ற தலைப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது : -

தாயின் வயிற்றில் குழந்தை உருவாகும் போதே அது உலகில் நடைபெறும் செயல்களை அறிய ஆரம்பிக்கிறது. எனவே அந்த வேளையில் தாய், தந்தை அமைதியாக அறிவான அம்சங்களை நாட வேண்டியது அவசியமாகும்.

பிள்ளை பிறந்ததில் இருந்து 12 வயது வரை அதன் வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுகிறது. இந்த நேரத்தில் பெற்றோர்கள் அப் பிள்ளையிடம் அன்பு காட்டி அவர்களது வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டியது அவசியமாகும்.

சிறுவர் பற்றி வளர்ந்து வரும் நாடுகள் பல அக்கறை கொண்டுள்ளன. சிறுவர்களது ஆற்றல் மிக்க எதிர்காலம் பெற்றோர்களிடமே தங்கி உள்ளது. அவர்களது உள, உடல் வளர்ச்சிக்கு உதவ வேண்டியது பெற்றோர்களது கடமையாகும்.

குடும்பம் ஒரு பாடசாலையாக, கோயிலாக உள்ளது. அது ஒரு பல்கலைக் கழகமாகவும் உள்ளது. தனது ஆரம்ப அபிவிருத்தியை பிள்ளை அங்கேயே கற்கிறது. அவர்களது ஆத்மீகம் வளர்வது பெற்றோர்களது கைகளிலேயே தங்கியுள்ளது.

ஒரு குழந்தை அன்பையும் உறவு முறைகளையும் குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்தே கற்கிறது, அறிகிறது. கண்களே உள்ளத்தை வெளிப்படுத்தும் சாதனமாகும். பிள்ளைகளிடம் பெற்றோர் தமது கண்கள் மூலம் அன்பைச் செலுத்த வேண்டும். அன்பான பார்வை, பிள்ளைகளின் இனிய மொழியைக் கேட்கும் பெற்றோரின் ஆவல் என்பன பிள்ளைகளின் ஆரம்ப வளர்ச்சிக்கு உதவுகிறது. கோபமான பார்வை, கடின வார்த்தைப் பிரயோகம் என்பன அவர்களைக் கொடிய சிறுவர்களாக மாற்றி விடுகின்றது.

ஒரு பிள்ளை குடும்பம் மூலமே சமூகத்தைப் பார்க்கிறது. 18 வயதுக்கு உட்பட்ட அனைவரும் சிறுவர் நிலையில் உள்ளார்கள். சிறுவர்களது ஆரம்ப அபிவிருத்தி அவர்களது பிறப்பில் இருந்து 12 வயதுவரை நிகழ்கிறது. 12 வயதின் பின்னர் பிள்ளைகள் சுயமாகச் செயற்பட ஆரம்பிக்கிறார்கள். ஆரம்ப அபிவிருத்தி நிலையில் அவர்களுடைய சிறந்த எதிர்கால வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான கண்ணோட்டத்தை செலுத்த வேண்டியது பெற்றோர்களது கடமையாகும்.

பிள்ளையினது வழக்கமான செயற்பாடு, சிந்தனை வளர்ச்சி என்பனவற்றுக்கு உதவ வேண்டியது பெற்றோர்களது கடமையாகும். அத்துடன் அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், உற்சாகப்படுத்துதல் அவர்களது எதிர்கால வளர்ச்சிக்கு உதவும்அம்சங்களாக உள்ளன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-51)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 2 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(130629 ஏ), (141752 ஏ), (141876 ஏ) (141876 பி), (147412 ஏ), (147428 ஏ), (147428 பி),

**யாழ்ப்பாணம்**

(130118 ஏ), (130183 ஏ), (140507 ஏ), (140594 ஏ), [140594பி], [ 40594சி], [140614ஏ], [140614பி] [140628ஏ], [140628பி] [140628சி], [140671ஏ], [140671பி], [140787ஏ], [140867ஏ], [140867பி] [142313ஏ], [142682ஏ[, [142699ஏ], [142699பி], [142699சி], [142699டி], [142699ஈ], [142699எவ்], [142742ஏ], [142792ஏ], [142792பி], [142811ஏ], [142811பி], [142811சி], (142822ஏ), (142836ஏ), (142833பி), (142844ஏ), (142844பி), (142844சி), (142844டி), (142844ஈ), (142845ஏ), (142847ஏ), (142857ஏ), (142892ஏ), (142918ஏ), (142923ஏ). (142926ஏ), (142963ஏ), (142970ஏ), (142971ஏ), (142982ஏ), (142986ஏ), (142993ஏ), (143011ஏ), (143020ஏ), (143023ஏ), (143023பி). (143037ஏ), (143037பி), (143056ஏ), (143056பி), (143077ஏ), (143077பி), (143077சி), (143086ஏ), (143120ஏ), (143125ஏ), (143150ஏ), (143150பி), (143150சி), (143165ஏ), (147727ஏ), (147768ஏ), (147781ஏ , (147782ஏ), (147783ஏ), (147784ஏ), (147785ஏ), (147787ஏ), (147793ஏ),

**நல்லூர்**

(128827ஏ), (128827பி), (128827சி), (142946ஏ), (142946பி), (142946சி), (142946டி), (142953ஏ), (142953பி), (138169ஏ), (141883ஏ), (141887ஏ), (141928ஏ), (141928பி), (141928சி), (141964ஏ) (141964பி), (141964சி), [141964டி], [141997ஏ], [147025ஏ], [147441ஏ],

**சண்டிலிப்பாய்**

[141324ஏ] [141753ஏ], [141753பி], [141945ஏ], [141945பி], [142 86ஏ],

**தெல்லிப்பழை**

[130641ஏ], [139713ஏ], [141258ஏ], [141258பி], [141848ஏ], [142088ஏ], [142088பி], [142088சி], [142088டி], [147410ஏ], [147410பி], [147410சி], [137420ஏ],

**உடுவில்**

(139538ஏ). (141198ஏ), (141199ஏ), (141734ஏ), (141734பி), (141734சி), (141785ஏ), (141796ஏ), (141797ஏ), (141868ஏ), (141885ஏ), (141923ஏ), (141940ஏ), (141947ஏ), (141947பி), (141947சி), (141993ஏ), (141993பி), (141993சி), (142011ஏ), (142028ஏ), (142029ஏ), (142029பி), (142029சி), (142079ஏ), (147023ஏ), (147023பி), (147023சி), (147023டி), (147023ஈ)

(க)

## இடமாற்றம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய க. தர்மராசா சங்கானை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

(க-117)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 01 — 1941

உதிர்வு: 15 — 04 — 1999

### திருமதி தவமணி சிவகுருநாதன்
**திதி: 03. 05. 2000**

அம்மா!

உருவத்தில் நீ எமைப் பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம் உயிர்கள் பிரியும் வரை
உயிர்த்திருக்கும் உள்ளங்களில்
அழியாத ஓவியமாய் என்றும்
நிலைத்திருப்பாய் அம்மா!

உங்கள் நினைவில் வாழும்
**கணவன், பிள்ளைகள், சகோதரர், மைத்துனர்**

ந. சிவகுருநாதன்
முந்திரிகைத் தோட்டம்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(75906)

# இந்தியத்தூதர் புதுடில்லி பயணம்; இலங்கை நிலை குறித்து விளக்குவார்

கொழும்பு, மே 3

இலங்கைக்கான இந்தியத் தூதர் சிவ்சங்கர் மேனன் அவசர அவசரமாகப்புதுடில்லி சென்றுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவ வெற்றிகளைக் குவித்துவரும் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று பௌத்த பீடங்களின் தலைவர்கள் கோரி உள்ளதை அடுத்து இந்தியத் தூதர் புதுடில்லி சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து அவர் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான இந்திய அரசுக்கு எடுத்து விளக்குவார் என்றும் கூறப்படுகிறது.

(இ-6-9)

## தளபாடங்கள்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்வியியல் கல்லூரிக்கு யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பகுதியினர் ஒரு தொகுதி தளபாடங்களை வழங்கவுள்ளனர்.

(இ-111)

## சமுர்த்தி வேலைகள் ஆரம்பம்

வலி. தென்மேற்கு, மே 3

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி வலயங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால் கிராமிய ரீதியில் வளர்ச்சி அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடியவகையில் பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் சமுர்த்தி வங்கிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதேவேளை — சமுர்த்தி இளைஞர் விளையாட்டு விவகார அமைச்சுக்கு சமுர்த்தி வங்கி அமைப்பது தொடர்பாகஇதுவரை யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என வடமராட்சி சமுர்த்தி முகாமையாளர் ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது.

(இ-185)

## 66 பேருக்கு நிரந்தர நியமனம்

நெல்லியடி, மே 3

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் அரச மருத்துவமனைகளில் அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வந்தவர்களுள் சுமார் 66 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 98 ஆம் வருடம் டிசெம்பர் 1 ஆம் திகதி முதல் அமைய தொழிலாளர்களாக நியமனம் பெற்றவர்களே 1- 11- 99 ஆம் திகதியிலிருந்து சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தற்பொழுது அவ்வப்பகுதி வைத்தியசாலைகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

(இ-109)

## பகிடிவதை

வவுனியா, மே 3

வவுனியா கல்விக் கல்லூரியில் புதிய கல்வி ஆண்டுக்கு அனுமதி பெற்ற ஆசிரிய மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் கடந்த ஞாயிறன்று பகிடிவதை புரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-7)

## ஆணைக்குழு அதிகாரி காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், மே 3

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடுவார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார்.

(இ-10)


## வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் பகுதி

**யாழ்ப்பாணக் கல்லூரி**

(யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக)

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

G. A. Q. யாழ்- பல்கலைக்கழகம்
G, A. Q. பேராதனைப் பல்கலைக்கழகம்
B. A. Part I யாழ்-பல்கலைக்கழகம்
B, A. Part II யாழ்-பல்கலைக்கழகம்
B. A. Final பேராதனைப் பல்கலைக்கழகம்

குறிப்பு;

1. ஆங்கில இலக்கியம், லிங்குள்ரிக் பாடங்கள் உட்பட எல்லாப் பாடங்களும் போதிக்கப்படும்.
2. விரிவுரை வகுப்புக்களுக்கு மேலதிகமாக(Tutorial-Class) கட்டுரை வகுப்புக்களும் பிரபல விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்படும்.
3. வார இறுதி வகுப்புக்கள், முழுப்பகல் நேர வகுப்புக்கள் என இரு பிரிவாக விரிவுரைகள் நடத்தப்படும்.
4. பல்கலைக்கழக தரமொத்த நூல் நிலைய வசதிகள் சகல மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

**ஆரம்பம்: 5-5-2000**

விவரங்களுக்கு:

பதிவாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி
(போதனா வைத்தியசாலைக்கு முன்பாக
வர்த்தக வங்கிக்கு அருகில்)

(சி/11917)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சின்னக்குட்டி சுந்தரலிங்கம்**

(கட்டுவன் – மாவிட்டபுரம்)
(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்,
சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்)

மலர்வு 23 – 10 – 1935
உதிர்வு 03 – 04 – 2000

திதி: 03 - 05 - 2000

மாதமொன்று போனது தான்
எங்கள் துயர் என்றும் போகுமோ?
நீயின்றி வாடுகின்றோம் – உன்
நினைவாலே வாழுகின்றோம்!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், சகோதரர்,
மைத்துனர். மருமக்கள், பேரர்.

பொற்பதி லேன், றோட்,
கொக்குவில் கிழக்கு.

(75847)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 – 07 – 1928
உதிர்வு 26 – 04 – 1998

**திருமதி மகேஸ்வரி சரவணமுத்து**

(முன்னாள் அதிபர்,
உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை)

திதி: சித்திரை அமாவாசை (03 – 05 – 2000)

"புத்தேளிர் போற்றுவரே!"

கோவைநகர்க் கவிஞர்பிரான் குணன்சர வணமுத்து
மேவியசீர் நன்மனையாள் மிளிர்சந்தி ரோதயத்தின்
தேவைபல நிறைவுசெய்த திறன்மிகுந்த அதிபரவர்
பாவைமகேஸ் வரிநல்லாள் பரனடிகள் சேர்ந்தனளே.

ஆண்டிரண்டு போனாலும் அவர்நினைவோ மறையவில்லை
ஈண்டிருப்ப தாயெண்ணி எல்லவரும் ஏத்துகின்றார்
நீண்டபுகழ் ஆசிரியை நித்தியா னந்தனருள்
பூண்டனரே அவர்பெருமை புத்தேளிர் போற்றுவரே!

மக்கள், மருமக்கள்,
பேரர், சகோதரர்.

''மகேஸ்வரம்''
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(75930)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் ஐயாத்துரை பரம்சோதி**

தோற்றம்: 8-7-1943
மறைவு; 3-4-2000

அன்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாய் விளங்கிய எமது அன்புத் தந்தையே! பாசமாய் எம்மை வளர்த்துப் பாரினிலே பரிதவிக்க விட்டீரோ! இனி அப்பா என்று யாரை நாம் அழைப்போம்? என்றென்றும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு அகலாது!

'நேற்று இருப்பார் இன்று இல்லை.
இன்று இருப்போர் நாளை இல்லை'
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

3-4-2000 ஆம் திகதியன்று இறைவனடி எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், சகல வழிகளிலும் உதவிகள் வழங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கும் தொலைபேசி, பக்ஸ், தந்தி, கடிதமூலமும் நேரிலும் கலந்து கொண்டு எமக்கு உதவிகளும் ஆறுதலும் நல்கியவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (03-05-2000) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

(75921)

# உதயன்

## இந்தியா என்ன செய்யும்?

"இராணுவ வெற்றிகளைக் குவித்து வரும் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு இந்தியப்படைகளை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்"

— இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியிருப்பவர்கள் வேறு யாருமல்லர், இலங்கையின் பௌத்த பீடங்களின தலைவர்கள்தான் இப்படிக் கோரியிருக்கின்றார்கள்.

அதுவும் கூட்டாகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அலுவலகத்துக்கு நேரில் தாமே சென்று இந்தியத் தூதரைச் சந்தித்து, அவரது காலில் விழாத குறையாக இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார்கள்.

நாட்டின் தலைவரான ஜனாதிபதி முதல் இங்குள்ள பிரமுகர்கள் அனைவரும் பௌத்த பீடாதிபதிகளைத் தேடிப்போய் அவர்களது பீடங்களில் அவர்களை நேரில் தரிசித்து, பாதங்களில் விழுந்து வணங்கி, ஆசி வேண்டி சந்திப்பதுதான் வழமை.

நாட்டுப் பிரச்சினை குறித்து பௌத்த பீடாதிபதிகளுடன் ஆலோசனை நடத்த விருப்பம் தெரிவித்து, தனதுபாதுகாப்புக் காரணங்களைக் கருதி, பீடாதிபதிகளை தமது அலரி மாளிகை இல்லத்துக்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் அழைத்ததும் —

அந்த அழைப்பைத் தூசாக மதித்துத் 'தூவென' தூக்கி எறிந்து, சந்திப்புக்கு பீடாதிபதிகள் மறுப்புத் தெரிவித்ததும் — எல்லோருக்கும் தெரிந்ததே.

இப்போது அந்தப் பீடாதிபதிகளும் அவர்களது பிரதிநிதிகளும்தான் இந்தியத் தூதரின் காலில் போய் விழுந்திருக்கிறார்கள்.

இராணுவ வெற்றியால் மேலோங்கிய போது தமிழர் தரப்பை தூக்கி எறிந்து நடந்த அரசும் பௌத்த பீடங்களும் பேரினவாதிகளும் யுத்த களத்தில் தோல்வி வந்துற்ற போது இந்தியாவின் உதவியை நாடியிருக்கிறார்கள்.

நாட்டில் ஒருபுறம் தமிழர் விடுதலைப் போராட்டமும் மறுபுறத்தில் தென்பகுதித் தீவிரவாதிகளும் தீவிரமாகச் செயற்படத் தொடங்கிய காலத்தில் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்தியாவின் காலடியில் போய் விழுந்தார்.

இந்தியப் படைகளைக் கூட்டி வந்து புலிகளுடன் மோதவிட்டுவிட்டு தனது படைகளை ஜே. வி. பி. பக்கம் திருப்பி விட்டார்.

அவருக்கு அடுத்து வந்த ஜனாதிபதி பிரேமதாஸா ஜே. வி. பியை தனது படைகள் மூலம் அடக்கிய பின்னர் இந்தியப் படைகளை — காலம் குறிப்பிட்டுக் கலைப்பதற்காக — புலிகளுடன் கைகோர்த்தார்; இந்தியப் படைகளை அனுப்பிவிட்டுப் புலிகளுடன் பேசத் தொடங்கினார்.

பின்னர் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்திய இப்போதைய ஜனாதிபதி சந்திரிகா இராணுவ வெற்றிகள் தமக்கே சொந்தம் என்ற கணிப்பில் சமரச முயற்சிகளை மூலையில்— கிடப்பில்— போட்டுவிட்டு இராணுவரீதியில் புலிகளை ஒடுக்குவதில் தீவிரம் காட்டினார்.

இப்போது தான்போட்ட சுருக்கிலே தானே சிக்கும் நிலை வந்ததும் மீண்டும் இந்தியத் தரப்பிடம் தருணம் பார்த்து உதவி கோரப்படுகின்றது.

இந்தியத்தரப்பு ஏமாறுமா— தலையிட்டு ஈழத்தமிழர்களை ஏமாற்ற முயலுமா— என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மிருசுவில் வைத்தியசாலை மூடப்படும் நிலைமையில்

## தளபாடங்கள் ஏற்றப்படுகின்றன

தென்மராட்சி, மே 3

தற்போதைய யுத்தம் காரணமாக மிருசுவில் அரசினர் வைத்தியசாலை மூடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வைத்திய சாலையிலிருந்து தளபாடங்கள் மருந்து வகைகள் நேற்று வாகனங்களில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டன.

மிருசுவில் பகுதி மக்கள் கொடிகாமத்துக்கு அப்பால் வெளியேறியதையடுத்து வைத்தியசாலையும் மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொடிகாமத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த பளை வைத்தியசாலை மீசாலையில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## மெய்வல்லுநர் போட்டி இறுதி நாள்

காரைநகர், மே 3

தீவகக் கல்விவலய வேலணைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை புங்குடுதீவு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (க-73)

## ஜூஸ் பைக்கெட்டுக்கள் கைப்பற்றப்பட்டு அழிப்பு

சண்டிலிப்பாய், மே 3

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் அனுமதி பெறாது சுகாதார விதிகளுக்கு மாறாகத் தயாரிக்கப்பட்ட பெருந்தாகையான ஜூஸ் பைக்கெட்டுக்கள் ஆனைக்கோட்டைப்பொதுச்சுகாதார பரிசோதகரினால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளிலுள்ள கடைகளிலும் விற்பனை நிலையங்களிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஜூஸ் பைக்கெட்டுக்களே கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

தற்போது நிலவும் கடும் வெப்பத்தைப் பயன்படுத்தி சிலர் தாம் விரும்பியவாறே 'ஜூஸ்' பைக்கெட்டுக்களைத் தயாரித்து விற்பனை செய்து வருவதாகவும்—

இப்படியானவர்கள் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்— ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி. தயாமோகன் தெரிவித்தார். (இ-135)

## காலி நீதிமன்றில் அபராதப் பணம் மோசடி

கொழும்பு, மே 3

காலி நீதிமன்றத்தில் கைதிகளினால் செலுத்தப்படும் அபராதப் பணம் அங்கு பணிபுரிந்து வந்த சில ஊழியர்களினால் மோசடி செய்யப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட அபராதப் பணம் இவ்வாறு மோசடி செய்யபபட்டுள்ளது இது தொடர்பாக காலி நீதிமன்றத்தில் பணியாற்றி வந்த எழுதுவினைஞர் ஒருவர் காலிப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (க—9)

## ஆலயம் புனரமைப்பு

சண்டிலிப்பாய், மே 3

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை வளவிலுள்ள ஞானவைரவர் ஆலயம் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை இந்த வைத்தியசாலையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. இதன் திறப்பு விழா விரைவில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-6-185)

## ஐ. நா. ஏற்பாட்டில் குடாநாட்டில் இனவிருத்திசுகாதாரநடவடிக்கை

திருநெல்வேலி, மே 3

ஐ. நா சனத்தொகை நிதியத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் இனவிருத்தி சுகாதாரம் சம்பந்தமான அறிவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கென ஐ. நா சனத்தொகை நிதியம் 18 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறையில் இதற்கென யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட டாக்டர்கள், பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப சுகாதாரச்சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு பயிற்சி வகுப்புக்கள்நடத்தப்பட்டன.

இதன் அடுத்த கட்டமாக யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தொண்டர்களுக்கான ஒரு வார காலப் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

இத் தொண்டர்களின் உதவியுடன் கிராம மட்டத்தில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். பெண்களுக்கான கர்ப்ப கால பராமரிப்பு, தாய் – சேய் நலன் பேணுதல், குடும்பத்திட்டம், இன விருத்தி உறுப்புகளில் ஏற்படும் நோய்களும்தொற்றுகைகளும் இனவிருத்தி சம்பந்தமான சேவைகளை பெறுதல் ஆகிய பல்வேறு அம்சங்கள் இத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது (இ–135)

## மின்சாரக் கட்டணங்கள் ஜூன் மாதம் முதல் அதிகரிப்பு

கொழும்பு, மே 3

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் மின் கட்டணங்கள் 25 சதவீதத்தால் அதிகரிக்கும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முதல் 30 'யூனிட்' மின் பாவனைக்கும் தலா ரூபா 2 40 வீதமும் —

31 யூனிட்முதல் 90 'யூனிட்'டுக்களுக்கான கட்டணம் யூனிட் ஒவ்வொன்றுக்கும் ரூபா 2.90 வீதமும் —

90 'யூனிட்டுக்கு' மேலான ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூபா 5.50 வீதமும் — கட்டணம் அறவிடப்படும்.

அதேவேளை —

தொலைபேசிக் கட்டணமும் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ–6-9)

## நயினை உற்சவம் ஜூன் 2 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், மே 3

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஜூன் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

இந்த மஹோற்சவத்தில் 8 ஆம் திகதி இரவு கைலைக் காட்சியும் 10 ஆம் திகதி பகல் அம்பாளுக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் நடைபெறும். தொடர்ந்து 11 ஆம் 12 ஆம் திகதிகளில் முறையே மஞ்சத் திருவிழாவும், வாயு பட்சணிநாகம் வீதியுலா வருதலும் இடம்பெறும். 14 ஆம் திகதி பகல் கைலைக் காட்சியும் இரவு சப்பறத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தேர்த் திருவிழா 15 ஆம் திகதி காலை 10 மணிக்கும் 16 ஆம் திகதி காலை தீர்த்த உற்சவமும் 17 ஆம் திகதிஇரவு தெப்பத் திருவிழாவும் நடைபெறும்.

இதேவேளை 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8. 52 மணிக்கு திருமஞ்சம் வெள்ளோட்ட விழாவும் நடைபெறவுள்ளது.

அம்பாளைத் தரிசிக்க வருகின்ற அடியவர்கள் இயன்றளவு பொதிகளைக் குறைத்துப் பிரயாணத்தை இலகுவாக மேற்கொள்ள உதவுமாறு அறங்காவலர் சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ–10)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 3

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுப் பதில் செயலாளரினால் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவோர் இம்மாதம் 12 ஆம் திகதிக்கு முன்பு பதில் செயலாளர், கல்விச் சேவைக்குழு, இசுறுபாய, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்கள் யாவும் ஏப்ரல் 14 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியாகியுள்ளன. (இ-10)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் புதிய நிர்வாகசபைதெரிவு

யாழ்ப்பாணம், மே 3

யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் 2000 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு நேற்று செவ்வாய்க்கிழமை ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் இடம் பெற்றது. (-6)

## பயிற்சி வகுப்பு

சண்டிலிப்பாய், மே 3

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இனவிருத்தி சுகாதாரம் தொடர்பான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இப்பிரிவைச் சேர்ந்த 30 சுகாதார தொண்டர்களுக்கு ஐந்து நாள் பயிற்சி வகுப்பு கடந்த வாரம் நடத்தப்பட்டது. மல்லாகத்திலுள்ள தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இந்தப் பயிற்சி நடைபெற்றது. (இ-6–135)

## நாளை

சித்திரை 22

வியாழக்கிழமை

திதி: அமாவாசை முற்பகல் 10.27 வரை.

நட்சத்திரம்: பரணி முன்இரவு 9.35 வரை.

சுபநேரம்: 7.26 8.56

ராகுகாலம்: 1 26 2.56

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## உதய வாக்கு

உத்தம குணங்களையுடையவன் எல்லோரையும் உத்தமனாகவே கருதுகிறான்.

- ஸ்காட்

## வடமராட்சி, பச்சிலைப்பள்ளியில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

வடமராட்சி, மே 3

வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென பாடசாலை உபகரணங்கள் அடங்கிய சுமார் 400 பொதிகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் வடமராட்சி கல்வி வலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா இவற்றை உரிய மாணவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்

போர்ச் சூழ்நிலையால் இடம்பெயர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கல்விக் கோட்டங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இப் பொதிகள் வழங்கப்படவுள்ளன

அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் மூலம் இடம்பெயர்ந்த மாணவர்களின் விபரங்கள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளன. (இ-6–173)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

44, திருமகள் வீதி, அரியாலையில் (தபாற்கட்டைச் சந்திக்கு அருகில்) வீடு விற்பனைக்கு உண்டு. (சிறிய சேதத்துடன்) தொடர்பு: க. இந்திரன், Old No. 26, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.

(75931)

### ENGLISH / SINHALA

சகல தரங்களுக்கும் விஷேட வகுப்புகள் வழமைபோல் நடைபெறுகின்றன. பாடசாலைக்குச் செல்லாதவர்கள் காலை 9.00 முதல் வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொள்ளலாம். T. Sagathevan B.A. London. 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் T.P-3520

(75907)

## பிரிவுபசார வைபவம்

தென்மராட்சி, மே 3

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் எழுதுநராக கடமையாற்றி ஆசிரிய நியமனம் பெற்றுச் செல்லும் செல்வி கு. யோகேந்தினிக்கு நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் சமீபத்தில் பிரிவுபசார விழா சங்க உப தலைவர் செல்வி ஆ. ஞானசோதி தலைமையில் நகர சபை அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சி. இரகுநாதன், ச. சுப்பையா பிரதம எழுதுநர் திருமதி நா. அருமைநாயகம், திருமதி சு. சிறிதரன், க. ஜெயானந்தன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(இ-117)

## ஆலயத்தில் சிரமதானம்

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தை ஆலய இந்து இளைஞர் மன்றத் தொண்டர்கள் கடந்த ஒரு வார காலமாக சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருகின்றனர்.

ஆலயத்துக்கு வர்ணம் தீட்டும் பணியிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

(இ-6-17)

## பதவி உயர்வு தொடர்பான கருத்தரங்கு

இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு வழங்குவது தொடர்பான செயற்பாட்டினைத் துரிதப்படுத்த வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான விளக்கக் கருத்தரங்கொன்று நாளை வியாழக்கிழமை மாகாணக் கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்கில்கலந்து கொள்ள வலயக்கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தர்கள் அழைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-9)

## மெய்வல்லுநர் போட்டி

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். ஆர். எஸ் தேவதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க - 73)

---

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



### அமரர் இராசையா சத்தியபாலன்

அன்னை மடியில் 15-07-1949 — அரன் அடியில் 03-04-2000

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரங்களில் பங்குகொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்து துயரத்தை வெளிப்படுத்தியவர்களுக்கும் மற்றும் சகல விதமான உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (03-05-2000) புதனன்று எங்கள் அன்புத் தெய்வத்தின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவுத்துயர் தாளாத

**தாயார், பிள்ளைகள், சகோதரர், சகோதரி, மைத்துனர், மைத்துனி, மருமகன், பெறாமக்கள்.**

தகவல்: **மேரி இரத்தினம் (சகோதரி)**
ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.

(75929)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 09 — 07 — 1913
உதிர்வு: 29 — 04 — 1995

அமரர்

### ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை தம்பிஐயா

(தொழில் அதிபர்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் நேர்மையின்
நிறைகுடமாய்த் திகழ்ந்து
அனைவருக்கும் நல் வழி காட்டிய
எமது அன்புத் தந்தையே!
நீங்கள் எம்மை விட்டகன்று
ஐந்து ஆண்டுகள் சென்றிடினும்
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

உங்கள் பிரிவால் துயருறும்

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**M. K. T. சுருட்டுக்கள் விநியோகஸ்தர்கள்.**
வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

[75932]

---

நீர்வேலி தெற்கு

## ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல்நிலைய

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1. 2425 2. 1292 3. 2831

ஆறுதல் பரிசில்கள்

★ 3710 ★ 2150 ★ 0920 ★ 3234
★ 2315 ★ 2152 ★ 3988 ★ 1786
★ 1181 ★ 3270

பரிசுக் குரியவர்கள் 10 ஆம் திகதிக்கு முன் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்.

(75942)

---

யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்ப்பாணப் பொருள்களைக் கொழும்புக்கு

## குமண கப்பலில் அனுப்புவோரது கவனத்துக்கு!

மே மாத இரண்டாம் கிழமை அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து குமண கப்பல் கொழும்புக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் பொருள்களைக் கொண்டுசெல்ல விரும்புபவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

- இங்கிருந்து அனுப்பும் பொருள்களின் பெயர், அதன் அளவு போன்ற விவரங்களையும், அத்துடன் பொருள்களைப் பொறுப்பேற்க அமர்த்தியுள்ள முகவரின் விவரங்களையும் 06-05-2000 சனிக்கிழமைக்கு முன் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் சமர்ப்பிக்க வேண்டும்.
- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பழுதடையக் கூடிய பொருள்களுக்குக் கப்பல் கட்டணம் இல்லை. எனினும் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை ஏற்றி இறக்குவதற்குரிய கையாளற் கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.
- பழுதடையாத உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு CBM / MT இற்கு 25% கப்பல் கட்டணமும் அத்துடன் பொருள்களை பருத்தித்துறை துறைமுகத்தில் ஏற்றி இறக்குவதற்குரிய கையாளற் கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.

எனவே பொருள்களை ஏற்ற விரும்புபவர்கள் பொருள்களின் விவரம் சரியான அளவு ஆகியவற்றைக் குறிப்பிட்டு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் 06-05-2000 மதியம் 12.00 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்குப் பின்னர் வரும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனையும் கவனத்திற் கொள்க.

அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

(சி/12026)

---

## முதலாம் ஆண்டின் நீங்கா நினைவலைகள்



மனம் மகிழ: 06 — 03 — 1947
மனம்நெகிழ: 15 — 04 — 1999

அமரர்


### கந்தையா கணேசு

உங்கள் இழப்பு எமக்கு
ஈடுகட்ட முடியாதது
உங்கள் வார்த்தைகளை
எம் உள்ளம் மறக்காது
உங்கள் நினைவலைகள்
எம் உயிரைக் குடிக்கின்றது
எம்மைத் தவிக்க விட்டு
ஏன் அப்பா சென்றீர்கள்?
ஓராண்டு என்ன ஆயிரமானாலும்
மறவாத உறவுகள் நாம்.
ஓம் சாந்தி!

**குடும்பத்தினர்.**

நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை மேற்கு,
வண்ணார்பண்ணை.

(75944)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆரம்ப விழா நேற்று கோப்பாயில் நடைபெற்றது. கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் கல்லூரிக் கொடியை ஏற்றி வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *படங்கள்:பொ.இராஜேஸ்வரன்.*

# மாறும் உலகுக்கு ஏற்ப கல்வியை வழங்கும் நவீன பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு அவசியம்

## *கல்வியியல் கல்லூரி ஆரம்ப விழாவில் துணைவேந்தர்*

யாழ்ப்பாணம்,மே3

உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கல்வியை மாணவர்களுக்கு வழங்கக்கூடிய வகையில் ஆசிரியர்களுக்கு நவீன பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும். இதுவே இன்று அவசர, அவசியமான தேவையாகும்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆரம்ப விழா நேற்றுக் காலை நடைபெற்ற சமயம் அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கல்லூரியின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்ட இளைப்பாறிய அதிபர் க.இ.குமாரசாமி கல்லூரியின் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் துணைவேந்தர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

நாடு முழுவதும் கல்விக் கல்லூரிகள் அமைக்கப்பட்டபோதும், யாழ். மாவட்டத்துக்குக் கல்விக் கல்லூரி ஒன்று கிடைக்குமா என்று கேள்வி எழுந்திருந்தது. இறுதியாக வளம் குறைந்த நிலையில் இன்று அது கிடைத்துள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றபோதும் காலக்கிரமத்தில் அது வளர்ச்சி பெறும். கல்வி உலகில் இன்று பெரும் புயல் வீசுகின்றது. கல்விக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் நவீனதுறைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. சகலதும் கணனி மயமாகும் காலம் இதுவாகும்.

ஆனால் இந்த வசதி எமது மாணவர்களுக்குக் கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது. இந்த நவீன வசதிகளைப் பெற்று அந்தக் கல்வியை மாணவர்களுக்கு அளிக்கக்கூடிய ஆசிரிய சமூகம் உருவாக வேண்டும். இன்றுள்ள கல்வி முறையும் பெரிதாக உதவுவதாக இல்லை. பல்கலைக்கழகத்தில் படித்து வெளியேறிய எத்தனையோ பேர் ஆங்கிலத்தில் கடிதம் எழுதமுடியாத நிலையில் உள்ளனர். இந்நிலை மாறவேண்டியது அவசியம் - என்றார்.

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் பேசுகையில்:-

எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளை உருவாக்கக்கூடிய பணியை ஆசிரியர்கள்தான் செய்யவேண்டும். இந்த வகையில் செயற்படக்கூடிய ஆசிரியர்களை இந்தக் கல்விக் கல்லூரி நாட்டுக்கு அர்ப்பணிக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குகையில்:-

யாழ். மக்களின் கல்வி வரலாற்றில் உயர்படியில் காலடி வைக்கும் வகையில் இந்தக் கல்லூரி கிடைத்துள்ளது. உலக விவரங்களை மாணவர்கள் அறிய வரப்பிரசாதமாக இந்தக் கல்லூரி அமைந்துள்ளது - என்றார்.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் வழங்கிய செய்தியை வண. செல்வராசா அடிகள் வாசித்தார். அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

மக்களின் எழுச்சியை, அவர்களின் சமூக வளர்ச்சியை சிதைத்து மக்களின் இருப்பை அழிக்க வேண்டுமானால் கல்விப்புலத்தில் தலையீட்டை நியாயப்படுத்திய வரலாறு எமக்கு எல்லோருக்கும் தெரியும். கல்வி கற்க முனைந்த மாணவர்களின் பாடப் புத்தகங்களைக் கிழித்த வெறித்தனம் தொடக்கம் பாடப்புத்தகங்களில் புகுத்தப்பட்ட கருத்தியல்கள்வரை இதை அவதானிக்கலாம் - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

### பீடாதிபதி உரை

கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையுரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்தக் கல்லூரிக்கு சகல வசதிகளையும் வழங்க அரசாங்கம் முன்வந்தது. ஆனால் தொலைத்தொடர்பு, போக்குவரத்துத்தொடர்பு ஆகியன தடைப்பட்டதால் அரசின் உதவியெதுவும் கிடைக்கவில்லை. ஆனால் இன்று கல்லூரி திறக்கப்படுகின்றது. இதற்குப் பல தரப்பினரும் உதவிகளைச் செய்தனர். இந்தக் கல்லூரிக்கு 150 மாணவர்களை அனுமதிக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் பின்னர் 98 மாணவர்களே அனுமதிக்கப்பட்டனர். எஞ்சிய மாணவர்களை அனுமதிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு சகல தரப்பினரும் குரல் கொடுக்க வேண்டும் - என்றார்.

நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் மணிபல்லவராஜன் பேசுகையில்:-

97ஆம் ஆண்டு இந்தக் கல்லூரியை அமைக்கத் திட்டமிடப்பட்டது: ஆனால் இன்றுதான் அது இயங்க ஆரம்பித்துள்ளது - என்றார்.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், கோப்பாய்ப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம், வலிகாமம் வலயப் பணிப்பாளர் க.இராசையா, தீவக வலயப் பணிப்பாளர் எஸ். விக்கினேஸ்வரன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் வி.பி.பாலசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். (ஐ-3-180)


ஸ்ரீ மஹோற்சவகாலத் திருமுறைகள்

**நூல் வெளியீடு**

ஊரெழு

அமரர்

**சிவஸ்ரீ பால. வைத்தியநாதசிவாச்சாரியார்**

*அவர்களின் இரண்டாவது ஆண்டு*

*ஞாபகார்த்தமாக வெளியீடு செய்யப்பட்ட*

**ஸ்ரீ மஹோற்சவகாலத் திருமுறைகள்.**

கிடைக்குமிடம்: **சோதிட விலாச புத்தகசாலை,**
**46, பெரியகடை,**
**யாழ்ப்பாணம்.**

*சிவாச்சாரியபீடம்.*
*ஊரெழு மேற்கு. சுன்னாகம்.*

(75936)



**விவாக சுபமுகூர்த்த அழைப்பு**



| மணமகன் | மணமகள் |
| --- | --- |
| சிரஞ்சீவி | சௌபாக்கியவதி |
| **ஸ்ரீகாந்தசர்மா** | **சுபாங்கினி** |

காலம் :- **06-05-2000 சனிக்கிழமை**
முகூர்த்தம் :- **முற்பகல் 11.00 மணி முதல் 01.00 மணி வரை.**
விவாகம் நடைபெறும் இடம்:- **மணமகள் இல்லம்**
(கணேசவாசம், அம்பலவாணர் வீதி, கற்பொக்கணை உடுவில்)
சமாவர்த்தனம் : **06-05-2000 காலை 6.00 மணி.**
பெண் அழைப்பு : **06-05-2000 மாலை 3.00 மணி.**

*மேற்படி வைபவங்களில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் - ஸ்ரீமதி ச. சாந்தாதேவி,**
**கதிரமலை சிவன் கோவில்,**
**சுன்னாகம்.**

**பிரம்மஸ்ரீ வி. பரிபூரணானந்த சர்மா - ஸ்ரீமதி ப. ரேவதி,**
**'கணேச வாசம்'**
**உடுவில்.**

(C/12004)


## தீயில் எரிந்து மரணம்

தனக்குத் தானே தீமூட்டி எரிந்ததாகத் தெரிவித்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சைக்குட்படுத்திய நிலையில் அங்கு மரணமானார்.

இணுவிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் முத்துவேலு நவரத்தினம் (வயது 46) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று நடைபெற்ற மரணவிசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## தொல்புரத்தில் 2 இளைஞர்கள் கைது!

தொல்புரம் பகுதியில் கடந்த 28ஆம் திகதி இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜீவனேசன் (வயது25), செல்வராசா துஷ்யந்தன் (வயது19) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களின் கைது குறித்து உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

## பல்கலைக்கழக மாணவருக்கு கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அனைத்துப் பீட மாணவர்களுக்குமான கூட்டமொன்று இன்று காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என்று ஒன்றியம் அறிவித்துள்ளது. (ஐ-3-8)

## பயிற்சிநெறி ஆரம்பம்

தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் நடத்தப்படும் கணனி பிரயோக உதவியாளர்களுக்கான பயிற்சிநெறி நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ஐ-5)

## மாணவனை காணோம்

யாழ்ப்பாணம்,மே3

கொடிகாமத்தைச் சேர்ந்த 13 வயது மாணவன் ஒருவன் யாழ். நகரில் கடந்த 24ஆம் திகதி காணாமல்போய்விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாகநாதன் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த நடேசன் அகிலன் என்பவரே காணாமல்போனவராவார்.

தமது உறவினர் ஒருவருடன் யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள தேநீர்க் கடையொன்றில் தேநீர் குடித்துக் கொண்டிருந்த பின்னர் வெளியே வந்த இவர் பின்னர் காணாமல்போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

## கூ.சங்க அங்கத்தவர்களுக்கு நிவாரணம்

தென்மராட்சி,மே.3

பளைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ளபளை பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கு சங்கத்தினால் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

கொடிகாமத்தில் இயங்கும் சங்க தலைமை அலுவலகத்தில் இன்று முதல் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் செ.தவராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மே3

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டபின் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவர்களில் ஒருவர் நேற்று யாழ். நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

முனிகோயிலடி இருபாலை கிழக்கைச் சேர்ந்த பொடிமாத்தையா தனுசீலன் என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில்நேற்று ஆஜர் செய்யப்பட்ட மேற்படி இளைஞரை 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்த நீதிவான் ஜூன் 7ஆம் திகதி யாழ். நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ஐ-5)

## இன்று செயலகத்தில் முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம்,மே3

குடாநாட்டில் பணிபுரியும் சகல பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு செயலகத்தில் இடம்பெறவிருப்பதாக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவிருப்பதால் சம்பந்தப்பட்டவர்களை தவறாமல் கலந்துகொள்ளுமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3-8)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே3

உடுவில் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தெரிவித்தார். (ஐ-3)

# அநியாய அழிவுகள் வேண்டாம்!

# யாழ்ப்பாணம் புலிகளின் பூமி! படையினரே வெளியேறுங்கள்!!

## தென்பகுதி பெற்றோர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு,மே3

யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் பூமி. எனவே அதனை அவர்களிடமே ஒப்படைத்து விட்டு இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறவேண்டும். இதன் மூலமே வீணான உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

காணாமற்போன படையினரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கத் தலைவர் ஜே.பி.நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருவதனால் அங்கு கடமையாற்றும் எமது பிள்ளைகளான படையினரைத் தென்பகுதிக்கு அழைக்கவேண்டும். எனவே அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் சண்டையை நிறுத்திவிட்டு விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சு நடத்தவேண்டும்.

பலாலியைக் கைப்பற்றப் புலிகள் பெரும் தாக்குதல் நடத்துவார்களானால் படையினர் பலத்த உயிரிழப்புக்களைச் சந்திக்க நேரிடும்.

வேறு நாடுகளுடன் யுத்தம் செய்து எமது பிள்ளைகள் உயிரிழந்தால் பரவாயில்லை. இங்கு எமது சகோதரர்களுடன் மோதியே பிள்ளைகள் உயிரிழக்கின்றனர்.

இவ்வாறு நாணயக்கார மேலும் தெரிவித்தார்.(ஐ-7)

## விமானநிலையத்தில் அரசியல்வாதிகளின் பொதிகளையும் சோதனை செய்ய உத்தரவு

கொழும்பு,மே3

அரசியல்வாதிகள் பயணம் செய்யும் போது விமான நிலையத்தில் அவர்களது பொதிகள் வழமையான நடைமுறையின்கீழ் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

சகல அரசியல்வாதிகளின் பொதிகளும் விமான நிலைய சுங்கப் பகுதியில் வழமையான சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அரசியல்வாதிகளின் பொதிகள் வழமையான பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதில்லை என்று தமக்கு தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜதந்திரிகளுக்கான கடவுச் சீட்டுகள் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் நோக்கம் தாமதமில்லாமல் அவர்கள் பயணம் மேற்கொள்வதற்காகும். ஆனால் இதன் மூலம் பொதிகள் வழமையான பரிசீலனைக்கு உட்படுத்தப்படாமல் விடப்படுவது அனுமதிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

எனது குடும்ப அங்கத்தவர்களினதும் எனது பொதிகளும் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்துவதுண்டு எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(ஐ-7-8)

## மன்னாரில் சுவரொட்டிகள்

கொழும்பு,மே3

மன்னாரில் உள்ள படையினரை வெளியேறுமாறு கோரும் சுவரொட்டிகள் அங்கு ஒட்டப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

மன்னார் நகரை அண்டிய படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலேயே இந்தச் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

ஆனையிறவுத்தளம் மீதான தாக்குதலைப் போன்று மன்னார் மாவட்டத்தில் உள்ள தளங்கள் மீதும் கடும் தாக்குதலைத் தொடுக்கப்போவதாகவும் -

எனவே மன்னாரை விட்டு வெளியேற வேண்டும் என்றும் - அந்தச் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-க-3)

## கொழும்பு விமான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் -

அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை -

கட்டுநாயக்க விமான நிலையத்தை படமெடுத்த பாகிஸ்தான் பிரஜை ஒருவர் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-8)

## கிளாலிப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒன்பது தினங்களுக்கு முன் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்து முன்னேறிப் பளை நகரத்தைக் கைப்பற்றி, முகமாலை வரை முன்னேறி அங்கு நிலைகொண்டுள்ளதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

கிளாலிவரையான தென்பகுதிக் கரையோரப் பகுதியையும் தாம் கைப்பற்றியதாகவும்-

கிளாலியிலுள்ள கடற்படை - இராணுவக் கூட்டுத்தளம் மீது தொடர்தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் - விடுதலைப் புலிகள் நேற்று மாலை அறிவித்தனர்.

இந்தச் சண்டை குறித்துப் படை அதிகாரிகளிடம் கேட்ட போது இது தொடர்பான பிந்திய தகவல்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று அவர்கள் பதிலளித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

இராணுவத்தின் 53 ஆவது படைப்பிரிவின் மூன்றாவது அணியினர் கிளாலியில் நிலை கொண்டிருந்தனர் என்று சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

(ஐ-க-3-7-8-15)

## ஜனாதிபதி-ரணில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்று ரணில் விக்கிரமசிங்க பின்னர் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ரணிலுடன் கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரியா, செயலாளர் காமினி அத்துக்கொறள ஆகியோர் பங்குபற்றினர்.

ஆனையிறவில் ஏற்பட்டுள்ள பின்னடைவு நிலை, தற்சமயம் யுத்த முனையில் ஏற்பட்டுள்ள நிலை ஆகியன தொடர்பாக ஜனாதிபதி ரணிலுக்கு விளக்கம் அளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவுத் தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த படையினரின் விவரங்களையும் ஜனாதிபதி ரணிலிடம் சமர்ப்பித்தார்.

ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய பல கேள்விகளுக்கும் ஜனாதிபதி பதிலளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

யுத்த நிலைமைகள் குறித்து பலவிதமான வதந்திகள் பரப்பப்படுவதனால், உண்மை நிலை குறித்து தம்முடன் அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என்று ஜனாதிபதி ரணிலிடம் தெரிவித்தார்.

நாட்டின் உண்மை நிலை குறித்து மக்களுக்குத் தெரிய வசதியாக, யுத்தம் தொடர்பான செய்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்றும்-

நாடாளுமன்றைக் கூட்டி விசேட விவாதம் நடத்தவேண்டும் என்றும்-

ஜனாதிபதியிடம் ரணில் கோரிக்கை விடுத்தார்.

இவ்விரு விடயங்கள் குறித்தும் ஜனாதிபதி சரியான பதில் அளிக்கவில்லை என்று ரணில் தெரிவித்தார்.

நேற்றைய பேச்சுக்கள் சமூகமாக இடம்பெற்றதாக அரசுத்தரப்பு தகவல் வெளியிட்டபோதிலும் - பேச்சுக்கள் திருப்திகரமானதாக அமையவில்லை என்று ஐ.தே.க. வட்டாரங்கள் கூறியுள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இதற்கிடையில் -

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து அரச தொடர்புச் சாதனங்களில் நேற்றிரவு வெளியான செய்திகளில் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய விஜயம் தொடர்பாகவும் -

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தி வருகிறார் என்ற சாரப்படவும்-

கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

(ஐ-3-7-8-9)

## பயிற்சி வகுப்பு இடமாற்றம்

தென்மராட்சி,மே.3

பளைப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினால் பளையில் நடத்தப்பட்ட தையல், மனையியல் பயிற்சி வகுப்புக்கள் மீசாலைக்கு மாற்றப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட பயிலுநர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள பளை பிரதேச செயலகத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

கடந்த வருடம் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சியினை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் பிரதேச செயலகத்துக்கு வந்துள்ளதாக பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் ம.அழகேந்திரன் தெரிவித்தார்.

(ஐ-117)

## அனுமதி மறுப்பு

கொழும்பு,மே.3

வவுனியாவில் இருந்து நேற்று இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிக்குச் சென்ற பொதுமக்களில் ஒரு தொகுதியினர் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

பெரிய பொதிகளை இவர்கள் எடுத்துச் சென்றதாலேயே திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-8)


**BARATHY**

சித்தன்கேணி.

**A/L 2002**

இணைந்த கணிதம்

யாழ். ஆசிரியர்

நா. அம்பி B.Sc.

புதிய பிரிவு ஆரம்பம

04-05-2000

வியாழன் 4.00 p.m.

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

(75948)



கல்வி உலகின் முன்னோடி

**SUBRA (14)**

சித்தன்கேணி.

**2002 A/L**

பிரிவு II

ஆரம்பம்

ACC. - D.SAM

ECO. - ஜெயக்குமார்

COM. - நந்தீஸ்

TAM. - நாக.தமிழிந்திரன்

LOG. - E.S.பவன்

Hin..Cul. - சிறீஸ்

DRA. - பிரான்சிஸ்

GEO. - ஐங்கரன்

Criti. - வசந்தன்

Pol.Sc. - தவரட்ணம்

Com.math. - பிரதீபன்

Phys. - ஜெயம் கருணாநிதி

Chem. - எட்வேட்

Bolog. - கஜன் தயாபரன்

IQ - தவசேகர்

COM. ENGLISH - விஜயபாஸ்கர்

03-05-2000

3.00 p.m.

(75923)


# திருமலையில் தங்கியுள்ள பயணிகள் உண்ணாவிரதம்

## பிரதேச செயலர் தலையிட்டு இடைநிறுத்தம்

திருகோணமலை,மே3

வடபகுதிக்கு கப்பல் சேவை நடத்தக்கோரி 350 பயணிகள் நேற்றுக் காலை திருமலைப் பிரதேச செயலகம் முன்பாக உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதனையடுத்து உண்ணாவிரதிகளுடன் பிரதேச செயலர் வி. வேலும்மயிலும் கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

நேற்று மாலை கொழும்பில் இடம்பெறவிருந்த பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் வடபகுதிப் பயணிகள் போக்குவரத்து விடயம் ஆராயப்படவிருந்ததாகவும்-

அதன் முடிவு வரும்வரை போராட்டத்தை ஒத்திவைக்கும்படியும் -

பிரதேச செயலர் உண்ணா விரதிகளைக் கேட்டுக் கொண்டார். அதனையடுத்தே சுழற்சி முறையில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தைப் பயணிகள் கைவிட்டனர்.

(ஐ-3-8)

# கொடிகாமம், மிருசுவில் பகுதி மக்கள் இடம்பெயர்கின்றனர்

புன்னாலைக்கட்டுவன்,மே3

தென்மராட்சிப் பகுதியில் யுத்தம் தீவிரமடைந்து வருவதையடுத்து கொடிகாமம் மற்றும்மிருசுவில் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடந்தசில தினங்களாக இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் இருந்து நேற்றும் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றன. மாட்டு வண்டில்கள், உழவு இயந்திரங்களில் பொருள்களை ஏற்றிக்கொண்டு பல குடும்பங்கள் ஒன்றாக இடம்பெயர்ந்து செல்வதைக் காணமுடிகிறது. கொடிகாமம் பகுதி வர்த்தக நிலையங்கள் சிலவற்றிலிருந்தும் வர்த்தகர்கள் பொருள்களை அப்புறப்படுத்தி வருகின்றனர்.

(ஐ-15-139-133)

# உயிரிழந்த 16 புலிகளின் பெயர் விவரம் அறிவிப்பு

வவுனியா,மே3

தொடரும் 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையில் தமது தரப்பில் உயிரிழந்த மற்றும் 16 பேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர். விவரம் வருமாறு:-

வாசுகி (நாகமுத்து அருந்ததி - யாழ்ப்பாணம்), மதிமகள் (கிருஸ்ரிகா யூலி -யாழ்ப்பாணம்), பிறைசூடி (அல்பிறட் துஷ்யந்தன் - யாழ்ப்பாணம்), அன்புமாறன் (நடராஜா கோடீஸ்வரன் - வவுனியா), சகலன் (கணபதிப்பிள்ளை சிறிதரன் - மட்டக்களப்பு).

தம்பையா வசந்தகுமார் (யாழ்ப்பாணம்), வீரமணி (மயில்வாகன் யோகராஜா - திருகோணமலை), தர்மதன்(தேவராசா தயாபரன் - மட்டக்களப்பு), மதியந்தி (தவராசா சசிகலா - மல்லாவி), அறிவுச்சோலை (அருளப்பு மேரிகிச்சின்-வட்டக்கச்சி).

எட்வேர்ட் (கிருஷ்ணபிள்ளை மோகன் - மட்டக்களப்பு), செங்கப்பன் (தினேஷ் - யாழ்ப்பாணம்), செந்தமிழன் (நடராஜா பிரதீபன் - முரசுமோட்டை), கயல்விழி (ஏகாம்பநாதன் கனகேஸ்வரி - பூநகரி), இசைத்தீபன் (மனோகரன் கௌசல்யன் - மட்டக்களப்பு), குலமூர்த்தி (சாமித்தம்பி கண்ணன் - மட்டக்களப்பு)

(ஐ-7-8)

# யுத்தத்தை நிறுத்த கிளர்ச்சி செய்யுங்கள்!

## ஊனமுற்ற படையினர் கோரிக்கை

கொழும்பு,மே.3

யுத்தம் தொடர்ந்தால் சிங்கள இளைஞர்கள் யாவரும் அங்கவீனர்களாகிவிடுவர். அந்த நிலை ஏற்படுவதைத் தடுக்க உடனே யுத்தத்தை நிறுத்துமாறு கோரி சகலரும் கிளர்ந்தெழ வேண்டும்.

படை நடவடிக்கையில் ஊனமடைந்த படையினரின் அமைப்பு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

ஊனமடைந்த படையினர் பொறளையில் நேற்றுக்கூடி சங்கம் ஒன்றை அமைத்த பின்னர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

"யுத்தத்தில் ஈடுபட்டு அங்கவீனர்களான நாம் இன்று நாட்டுக்குப் பாரமாக இருக்கின்றோம். யுத்தம் தொடர்ந்தால் சகல சிங்கள இளைஞர்களும் அங்கவீனர்களாகி விடுவர். இதை அனுமதிக்க முடியாது. எனவே யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்" என்று அந்த அமைப்பின் தலைவரான என்.ஆர்.அசோக தயாரத்ன தெரிவித்தார்.

(ஐ-3)


**BRIGHTMAN**

கல்வி நிலையம்

(நீராவியடிப் பிள்ளையார் கோவில் முன்பாக)

பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

**A/L 2002**

இணைந்த கணிதம

PURE - திரிகோண கணிதம

APP. - நேர்கோட்டியக்கம்

ஆசிரியர் திரு. ஐங்கரன்

ஆரம்பம் 04-05-2000 வியாழன் 3.30

(75935)



**HITECH**

**College of Computer Studies**

Kulappitty Jn., K.K.S Road, Kokkuvil.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

** MS OFFICE* ** AUTO CAD*

** VISUAL BASIC*

மேற்படி வகுப்புக்கள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு உடன் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(75934)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.